# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 02 வள்ளுவர் ஆண்டு 2054 ஆடி 14 செவ்வாய்க்கிழமை 30.07.2024 கதிர் 316








# சகல நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் நன்றி தெரிவித்தார் ஜனாதிபதி ரணில்!

## ஒன்றாக இணைய வருமாறும் அழைப்பு

**நாட்டை மீட்டெடுக்கும் பயணத்தில் ஆரம்பம் முதல் தம்முடன் இணைந்து பயணித்த சகல நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் நன்றி தெரிவிப்பதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். தமது உத்தியோகபூர்வ சமூக வலைத்தளங்களில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.**

2



## ஆளும் கட்சி எம்.பிக்களுக்கு ரணில் அழைப்பு

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்கும் ஆளும் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் விசேட கலந்துரையாடல் ஒன்றுக்காக ஜனாதிபதி செயலகத்துக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சந்திப்பு இன்று மாலை 5.30 மணியளவில் இடம்பெறுமென அறிவிக்கப்பட்டிருந்தது.

நேற்று நடைபெற்ற ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் அரசியல் குழுக் கூட்டத்தின் போது ஜனாதிபதிக்கு ஆதரவளித்த நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இதன்போது அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (05)

## அனுர குமாரவின் கூட்டத்திற்கு பொய்த் தகவல்களைக் கூறியே தாதியர்களை தேசிய மக்கள் சக்தியினர் அழைத்துவந்துள்ளனர்!

### விசாரணை கோருகிறார் ஜனாதிபதி தொழிற்சங்கப் பணிப்பாளர் நாயகம்



தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுரகுமார திசாநாயக்க தலைமையில் தேசிய இளைஞர் சேவை மன்ற கேட்போர் கூடத்தில் அண்மையில் நடைபெற்ற கூட்டத்தில் தாதியர்களுக்கு எதிராக ஓர் ஏமாற்று வேலை நடைபெற்றுள்ளதாக ஜனாதிபதி தொழிற்சங்க பணிப்பாளர் நாயகம் சமன் ரத்னபிரிய தெரிவித்தார்.

மேற்படிகூட்டமானது அநுரகுமார திசாநாயக்க தலைமையிலேயே நடைபெறவுள்ளது என்பது குறித்து அதில் கலந்து கொண்ட தாதியர்கள் அறிந்திருக்கவில்லை, தொழிற்சங்க வருடாந்த சபைக் கூட்டம் நடைபெறுவதாகக் பொய் கூறியே தாதியர்கள் தந்திரமான ரீதியில் இதற்கு அழைக்கப்பட்டுள்ளனர் எனவும் அவர் குறிப்பிட்டார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தவில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் உரையாற்றும் போதே சமன் ரத்னப்பிரிய இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவிக்கையில், “ஏனைய அரசியல்வாதிகளின் சிறு தவறுகளைக் கூட பெரிதாக்கும் அனுரகுமார திசாநாயக்க உள்ளிட்ட தேசிய மக்கள்சக்தியின்தலைவர்கள் தேர்தல் சட்டத்தை

2

## அனுரகுமார திஸாநாயக்க வேட்புமனு தாக்கல் செய்யாத நிலையில் தாதியர் சங்க மாநாட்டில் பங்கேற்றமை தேர்தல் விதிமீறல் அல்ல!

### மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா



ஜனாதிபதி வேட்பாளராக அனுர குமார திஸாநாயக்க வேட்புமனு தாக்கல் செய்யாத நிலையில் தாதியர் சங்க மாநாட்டில் பங்கேற்றமை தேர்தல் விதிமீறல் என கூறுவது நகைப்புக்குரியது என மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

குறிப்பாக அகில இலங்கை தாதியர் சங்கம் தொழிற்சங்க அமைப்பென்ற ரீதியில் அண்மையில் இந்த தாதியர் மாநாட்டை நடாத்தியதுடன், தாதியர்கள் கடமை நேர விடுமுறையிலேயே இதில் கலந்து கொண்டதாகவும், இந்நிகழ்விற்கு அதிதியாக அநுரகுமார திஸாநாயக்க அழைக்கப்பட்டதாகவும் அதன்படி அவர் அங்கு சிறப்புரை ஆற்றியதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்பாளராக அனுரகுமார திஸாநாயக்க இதுவரை வேட்புமனுவைக் கூடக் கையளிக்கவில்லை என்ற அடிப்படையில் இந்தக் குற்றச்சாட்டு தர்க்கரீதியிலான

2

## மாணவன் மீது தோட்ட அதிகாரிகள் தாக்குதல் நீதி கோரி இன்று போராட்டம் நடத்திய மக்கள்!



இரத்தினபுரி, நிவித்திகல நிரியெல்ல தமிழ் வித்தியாலயத்தில் ஜி.சீ.ஈ. சாதாரண தர வகுப்பில் கல்வி பயிலும் மாணவன் ஒருவர் மீது பாடசாலை நேரத்தில், தோட்ட கள அதிகாரிகள் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இதனால் பாதிக்கப்பட்ட மாணவன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தத் தாக்குதல் சம்பவத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து தோட்ட மக்கள் இன்று போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்நிலையில், மேற்படி தாக்குதல் சம்பவத்தை இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் அரசியல் அமைப்பாளர் ஷரூபன் பெருமாள் வன்மையாகக் கண்டித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக தோட்ட இளைஞர்கள் மற்றும் பாடசாலை நிர்வாகம் தொலைபேசி வாயிலாக தெரிவித்ததையடுத்து, பாடசாலைக்கு ரூபன் பெருமாள் சென்றிருந்தார்.

நீதி கோரி பாடசாலைக்கு முன்பாக திரண்டிருந்தவர்களுடன் அவர் கலந்துரையாடியதுடன் இவ்விடயம் தொடர்பாக அமைச்சர் ஜீவன் தொண்டமானின் கவனத்துக்குக் கொண்டு சென்றதுடன் மாணவன் மீது தாக்குதல் நடத்திய தோட்ட அதிகாரிகளை உடனடியாக இடமாற்றம் செய்யும்படி தோட்ட நிர்வாகத்துக்கு எச்சரிக்கையும் விடுத்தார்.

2

## பிரபஞ்சம் வேலைத்திட்டத்துக்கு தேர்தல்கள் ஆணைக்குழு தடை?

### நளின் பண்டார எம்.பி. முறைப்பாடு

எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாச தலைமையில் முன்னெடுக்கப்படுகின்ற பிரபஞ்சம் வேலைத்திட்டம் தேர்தல்கள் ஆணைக்குழுவினால் இடைநிறுத்தப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

நேற்றையதினம் அம்பாறையில் நடைபெறவிருந்த பிரபஞ்சம் நிகழ்வுகளையும் தேர்தல்கள் ஆணைக்குழு இடைநிறுத்தியுள்ளது.

ஒன்பது பாடசாலைகளுக்கு வகுப்பறை உபகரணங்களை வழங்கும் பிரபஞ்சம் திட்டங்களே இவ்வாறு இடைநிறுத்தப்பட்டுள்ளன.

இது தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தேர்தல்கள் ஆணைக்குழுவிலேயே முறைப்பாட்டினைப் பதிவுசெய்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நடத்தும் பொதுக்கூட்டங்கள் தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழு மௌனம் சாதிக்கும்

2

## மாணவன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இந்தத் தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடைய மூன்று பேரையும் உடனடியாகக் கைது செய்ய நடவடிக்கை எடுக்குமாறு நிவிதிகல பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மற்றும் இரத்தினபுரி மாவட்டத்துக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஆகியோரைத் தொலைபேசி மூலமாகத் தொடர்பு கொண்டு அழுத்தம் கொடுத்த ஷஷுபன் பெருமாள், நிவித்திகல

பிரதேச வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ள தாக்குதலுக்குள்ளான மாணவனைச் சந்தித்தும் நலம் விசாரித்தார். (05)

## அனுரகுமார......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மீறியுள்ளமை இந்தச் சம்பவத்தின் மூலம் நாட்டு மக்களுக்கு நிஷரூபித்துள்ளனர்.

இவ்வாறு வேறு ஒரு நிகழ்வுக்கென கூறி தாதியர்களை தமது பிரச்சார கூட்டத்திற்கு அழைத்தமை தொடர்பில் தேர்தல் ஆணைக்குழு சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும். ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், ஜனாதிபதி வேட்பாளரான அனுரகுமார திசாநாயக்க, இந்த கூட்டத்தில் தாதியர்களை சீருடையில் கலந்துகொள்ள வைத்ததன் மூலம் தேர்தல் சட்டத்தை மீறியுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக தேர்தல் ஆணைக்குழுவிடம் புகார் அளிக்கப்பட்டுள்ளதால், ஆணைக்குழு நியாயமான விசாரணையை மேற்கொள்ள வேண்டும்" என்றார். (ரெஜ-76)

## சகல நாடாளுமன்ற...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

"நாடு நெருக்கடியில் இருந்தபோதும் எரிபொருள், மருந்து மற்றும் அத்தியாவசியப் பொருட்களுக்காக மக்கள் போராடும்போதும் என் மீதும் எனது திட்டத்தின் மீதும் நீங்கள் நம்பிக்கை வைத்திருந்தீர்கள்.

சவால்களைச் சமாளிக்க முடியாததாகத் தோன்றிய சந்தர்ப்பத்தில் உங்களது அர்ப்பணிப்புக்கள் அளப்பரியன. இப்போது எங்களுடன் இணைந்திருப்பவர்களை வரவேற்கின்றோம்.

நேர்மறையான சிந்தனைகளைப் பகுத்தறிந்து கட்சி அரசியலை ஒதுக்கி வைத்துவிட்டு ஒன்றாக இணைவதன் முக்கியத்துவத்தை நீங்கள் தற்போது புரிந்துள்ளீர்கள்.

ஒன்றாக இணைவதால், நாம் இன்னும் சாதிக்க முடியும்.

அதேநேரம் செழிப்பான, ஐக்கிய இலங்கையை கட்டியெழுப்புவதற்கான எமது பணி தொடரும் என்பதை உறுதிப்படுத்துவதுடன், அதனை நனவாக்க ஒவ்வொருவரும் தயாராக இருக்க வேண்டும்.

இந்தப் பயணம் எளிதானதல்ல. ஆனால், ஒன்றாக இணைவதன் மூலம் நிலைபேற்றை அடையலாம்.

அனைவரும் ஒன்றிணைந்து எமது எதிர்பார்ப்புடனான இலங்கையை உருவாக்குவோம்" - என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேலும் தெரிவித்துள்ளார். (05)

## அனுரகுமார திசாநாயக்க....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

குற்றச்சாட்டல்ல. இதேவேளை, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தொடர்ந்து பாடசாலைகளுக்குச் சென்று பாடசாலை மாணவர்கள் முன்னிலையில் கூட்டங்களை நடத்துகின்றார். அதேபோல் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதி வேட்பாளராக பல்வேறு இடங்களுக்குச் சென்று நிவாரண பொருட்களை விநியோகித்து வருகின்றார். ஆனால், அவை எதனையும் இவர்கள் விமர்சிப்பதில்லை.

எனவே, அகில இலங்கை தாதியர் சங்கத்தின் மாநாட்டில் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் பங்கேற்றமை தேர்தல் விதிமுறை மீறல் தொடர்பான விடயம் அல்ல எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ரெஜ-77)

## பிரபஞ்சம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அதேவேளை, சஜித் பிரேமதாசவின் நிகழ்ச்சிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளமை நியாயமற்றது என்றும் நளின் பண்டார சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை எதிர்வரும் நாட்களில் பிரபஞ்சம் திட்டத்தில் 70 நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் நளின் பண்டார மேலும் தெரிவித்துள்ளார். (04)

# இலங்கை கிரிக்கட்டிற்கான புதிய யாப்புக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது

இலங்கை கிரிக்கட்டிற்கான புதிய யாப்பை முறைசார்ந்த வகையில் நிறைவேற்றிக் கொள்வதற்கான சட்டமூலத்தைத் தயாரிக்குமாறு சட்டவரைஞருக்கு ஆலோசனை வழங்குவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இலங்கை கிரிக்கட் இற்கான புதிய யாப்பைத் தயாரிப்பதற்காக ஓய்வுநிலை உயர்நீதிமன்ற நீதிபதி கே.ரீ.சித்ரசிறி அவர்களின் தலைமையிலான குழுவினால் இலங்கை கிரிக்கட் இற்கான புதிய யாப்பு வரைவாக்கம் செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பாக வெளிநாட்டலுவல்கள் அமைச்சர், மின்சக்தி மற்றும் வலுச்சக்தி அமைச்சர், தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் அவர்களும் இணைந்து சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# யாருக்கு ஆதரவு என்பது பற்றி நாளைக்கு அறிவிக்கப்படும்!

## ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தகவல்

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, எந்த ஜனாதிபதி வேட்பாளருக்கு ஆதரவளிக்கும் என்பது குறித்து நாளைய தினம் உத்தியோகபூர்வமாக அறிவிக்கும் என்று அக்கட்சியின் பிரதித் தலைவரான அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் இருக்கும் உறுப்பினர்கள் பிரிந்து, ஜனாதிபதி வேட்பாளர்கள் மூவருக்கு ஆதரவளிக்கவுள்ளதாக அந்தக் கட்சித் தகவல்கள் தெரிவிக்கின்றன.

முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன தலைமையிலான குழுவினர் ஜனாதிபதி வேட்பாளர் விஜேதாச ராஜபக்ஷவுக்கு ஆதரவளிப்பதற்கு தீர்மானித்துள்ளனர். அமைச்சர்களான நிமல் சிறிபால டி சில்வா மற்றும் மஹிந்த அமரவீர உள்ளிட்ட குழுவினர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர உள்ளிட்ட தரப்பினர் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாசவுக்கும் ஆதரவளிக்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் பல்வேறு நிலைப்பாடுகள் நிலவி வருகின்றன.

இந்த நிலையில் சுதந்திரக் கட்சி உள்ளிட்ட புதிய கூட்டணி ஆதரவளிக்கவுள்ள ஜனாதிபதி வேட்பாளர் யார் என்பதை நாளை உத்தியோக பூர்வமாக அறிவிக்கவுள்ளதாக அந்தக் கட்சியின் பிரதி தலைவர் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

# 20 இலட்சம் ரூபா பணத்துடன் சென்ற இளைஞர் சடலமாக மீட்பு

20 இலட்சம் ரூபா பணத்துடன் மோட்டார் சைக்கிளில் சென்ற இளைஞர் ஒருவர் பாண்டியன்குளத்தில் இருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

முல்லைத்தீவு - யோகபுரம் பகுதியைச் சேர்ந்த ஆனந்தராசா ஜீவன் (வயது 27) எனும் இளைஞரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மேற்படி இளைஞர் யோகபுரம் பகுதியில் இருந்து பாண்டியன்குளம் பகுதிக்கு 20 இலட்சம் ரூபா பணத்துடன் நேற்று திங்கட்கிழமை மாலை பயணித்துள்ளார். இரவு 08.40 மணியளவில் நண்பர்களுடன் தொலைபேசியில் உரையாடியுள்ளார்.

இரவு நீண்ட நேரமாகியும் திரும்ப வராத காரணத்தால் அவரது தொலைபேசிக்கு நண்பர்கள் அழைப்பு எடுத்த வேளை தொலைபேசி செயலிழந்து காணப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து இளைஞரை அவரது நண்பர்கள் தேடிச் சென்ற வேளை பாண்டியன்குளக் கரையில் அவரது மோட்டார் சைக்கிள் வீழ்ந்த நிலையில் காணப்பட்டுள்ளது.

அதனையடுத்து குளத்தினுள் தேடிய வேளை இளைஞரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (05)




செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV
YouTube தளம்

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

# நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்தின் கொடிச்சீலை வடிவமைப்பாளரிடம் காளாஞ்சி கையளிக்கும் நிகழ்வு





வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழாவிற்கான கொடிச்சீலை வடிவமைப்பாளர்களிடம் காளாஞ்சி கையளிக்கும் நிகழ்வு இன்றையதினம் செவ்வாய்க்கிழமை காலை இடம்பெற்றது.

ஆலயத்தில் இடம்பெற்ற விசேட பூசை வழிபாடுகளை தொடர்ந்து வள்ளியம்மை திருக்கல்யாணப் படிப்புடன், பந்தற்கால் நாட்டுதல் நடைபெற்று, பாரம்பரிய முறைப்படி கொடிச்சீலை வழங்கும் மரபுடையவர்களுக்கான காளாஞ்சி, மாட்டுவண்டில் மூலம் நல்லூரிலிருந்து கல்வியங்காட்டுக்கு எடுத்துச் செல்லப்பட்டு கலாசார முறைப்படி பெருந்திருவிழாவுக்கான பத்திரிகையும் காளாஞ்சியும் கையளிக்கப்பட்டன.

ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழா எதிர்வரும் 9 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 25 நாட்கள் திருவிழா இடம்பெறவுள்ளது.

(01)

# கிளிநொச்சி மாவட்ட தொழிற்றுறை மன்றம் செயற்பாடுகள் தொடர்பான கலந்துரையாடல்



கிளிநொச்சி மாவட்ட தொழிற்றுறை மன்றத்தின் முன்னேற்றம் மற்றும் வியாபார நிலையத்தினை நடைமுறைப்படுத்தல் தொடர்பான கலந்துரையாடல் இன்று (30) காலை 10 மணிக்கு இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடல் கிளிநொச்சி மாவட்டப் பதில் அரசாங்க அதிபர் எஸ். முரளிதரன் தலைமையில், மாவட்டச்செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இதன் போது ஜனாதிபதியின் எண்ணக்கருவிற்கு அமைவாக சிறுதொழில் முயற்சியாளர்களின் பிரச்சினைகளை கிளிநொச்சி மாவட்ட தொழிற்றுறை மன்றத்தின் ஊடாக, மாவட்ட மற்றும் மாகாண துறை சார்ந்த திணைக்களங்களின் ஊடாக சாத்தியமான தீர்வுகளை எவ்வாறு செயற்படுத்தலாம் என்பது தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

இதனைவிட, சிறுத்தொழில் முயற்சியாளர்களின் பிரச்சினைகள் தொடர்பிலும் கலந்துரையாடல் இடம்பெற்றது.

மேலும் கடந்த 12 ஆம் திகதி பிரதமரால் திறந்து வைக்கப்பட்ட கிளிநொச்சி மாவட்ட வியாபார சேவை நிலையத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்தல் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

இக்கலந்துரையாடலில் மேலதிக அரசாங்க அதிபர்(காணி), வட மாகாண தொழிற்றுறைத் திணைக்களத்தின் பணிப்பாளர், உதவி மாவட்ட செயலாளர், யாழ் பல்கலைக்கழகத்தின் வணிக முகாமைத்துவ பீடத்தின் பேராசிரியர்கள் உள்ளிட்ட விரிவுரையாளர்கள், கிறிஸலிஸ் நிறுவன மாவட்ட முகாமையாளர், கிளிநொச்சி மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர், துறைசார்ந்த திணைக்களங்களின் உதவிப் பணிப்பாளர்கள் மற்றும் மாவட்ட உத்தியோகத்தர்கள் மற்றும் சிறுத்தொழில் உற்பத்தியாளர்கள் என பல்வேறு தரப்பினரும் கலந்து கொண்டிருந்தனர்.

(02)




# விஞ்ஞான ஒலிம்பியாட் போட்டியில் தேசிய மட்டத்துக்குத் தெரிவு



(எம்.ஏ.றமீஸ்)

அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய கல்லூரி மாணவி விஞ்ஞான ஒலிம்பியாட் போட்டியில் வெற்றி பெற்று தேசிய மட்டப் போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளார் என கல்லூரியின் அதிபர் ஏ.எச்.பௌஸ் தெரிவித்தார்.

இம்மாணவியைப் பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு பாடசாலை வளாகத்தில் நேற்று (29) இடம்பெற்றது. பாடசாலை அதிபர் ஏ.எச்.பௌஸ் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வின்போது விஞ்ஞானப் பாட இணைப்பாளர் ஏ.எல்.நவாஸ் உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் கலந்து கொண்டனர்.

கடந்த சனிக்கிழமை மட்டக்களப்பு மகஜனக் கல்லூரியில் இடம்பெற்ற மாகாண மட்ட ஒலிம்பியாட் போட்டியில் பங்கு பற்றிய இப்பாடசாலையின் இரு மொழி கற்கைப் பிரிவில் தரம் 9 இல் கலவி பயின்று வரும் எம்.ஐ.பாத்திமா இப்பத், இரண்டாமிடம் பெற்று தேசிய மட்டப் போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இவ்வெற்றிக்காக மாணவர்களை வழிப்படுத்திய பாடசாலை விஞ்ஞானப் பாட இணைப்பாளர், விஞ்ஞானப் பாட ஆசிரியர்கள், பிரதி அதிபர்கள், உதவி அதிபர்கள், பெற்றோர் மற்றும் வெற்றி பெற்ற மாணவி போன்றோருக்கு அதிபர் தமது வாழத்துக்களைத் தெரிவிப்பதாகவும் எதிர்வரும் சனிக்கிழமை இம்மாணவி தேசிய மட்டப் போட்டிக்காக கலந்து கொள்ளவுள்ளார் எனவும் இதன்போது அதிபர் குறிப்பிட்டார்.

# கொழும்பு நகர வாகன நிறுத்துமிடங்களில் கட்டணம் வசூலிக்க தொழிநுட்ப முறை

## மாநகர சபை போக்குவரத்து பிரதிப் பணிப்பாளர் தெரிவிப்பு



கொழும்பு மாநகர சபை எல்லைக்குள் உள்ள வாகனத் தரிப்பிடங்களில் கட்டணம் வசூலிப்பதற்கு புதிய தொழிநுட்ப முறையொன்றை அறிமுகப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளதாக கொழும்பு மாநகர சபையின் போக்குவரத்துப் பிரிவின் பிரதிப் பணிப்பாளர் மஞ்சுள குலரத்ன தெரிவித்துள்ளார்.

அதன்படி, வாகனங்களின் எண்கள் 'ஸ்கான் ' செய்யப்பட்டு வாகனம் தரித்திருந்த கால அளவு கணக்கிடப்படுவதுடன், குறித்த வாகனங்கள் நிறுத்தப்படும் போது இந்த ஸ்கேனிங் மேற்கொள்ளப்படும் எனவும் வாகன உரிமையாளர் வாகனத்தை எடுத்துச் செல்லும் போது சரியான முறையில் கட்டண பற்றுச்சீட்டை வழங்க முடியும் எனவும் குலரத்ன குறிப்பிட்டுள்ளார்.

இந்த முறையின் மூலம் வாகன நிறுத்துமிடங்களில் சட்ட முறையற்ற விதத்தில் அதிக கட்டணம் வசூலிப்பதை எளிதில் இனங்காண முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இது தொடர்பாக தனியார் துறையின் தகவல் தொழிநுட்ப பொறியியலாளர்களின் ஆதரவை பெற்றுக்கொள்வது தொடர்பில் மாநகர ஆணையாளரிடம் கோரிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும், எனினும் இவ்வாறு தொழிநுட்பங்களை பயன்படுத்துவது பற்றிய கலந்துரையாடல்களை முன்னெடுத்துச் செல்கின்ற போதிலும், அரச சேவையில் தகவல் தொழிநுட்ப பொறியியலாளர்கள் இல்லாமையின் காரணமாக இவற்றை நடைமுறைப்படுத்துவதில் சில சிக்கல்கள் தோன்றியிருப்பதாகவும் குலரத்ன மேலும் தெரிவித்துள்ளார். (ரெஜ-78)

# சுயாதீன வேட்பாளராக ரணில் தவறென்கிறார் பஸில் ராஜபக்ஷ



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சுயாதீன வேட்பாளராகப் போட்டியிடுவதாக அறிவித்துள்ளமை முற்றிலும் தவறானது என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஸ்தாபகர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

ஜனாதிபதி வேட்பாளர் குறித்து இறுதித் தீர்மானத்தை எடுப்பதற்காக பொதுஜன பெரமுனவின் நிறைவேற்றுக்குழு அக்கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் நேற்று மாலை கூடியது.

ஜனாதிபதித் தேர்தலில் பொதுஜன பெரமுனவின் உறுப்பினர் ஒருவரை களமிறக்குதல் தொடர்பிலும், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை வேட்பாளராகக் களமிறக்குவது தொடர்பிலும் இதன்போது அவதானம் செலுத்தப்பட்டது.

ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதி வேட்பாளராகக் களமிறக்க வேண்டும் என்று ஒரு தரப்பினரும், கட்சியின் உறுப்பினரை ஜனாதிபதி வேட்பாளராகக் களமிறக்க வேண்டும் என்று பிறிதொரு தரப்பினரும் தமது நிலைப்பாட்டைக் குறிப்பிட்டனர்.

இதன்போது கருத்துத் தெரிவித்த பொதுஜன பெரமுனவின் ஸ்தாபகர் பஸில் ராஜபக்ஷ,

"ஜனாதிபதி வேட்பாளர் விவகாரம் குறித்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த நிலையில் அவர் சுயாதீன வேட்பாளராகப் போட்டியிடுவதாக அறிவித்துள்ளமை முற்றிலும் தவறானது.

2022 ஆம் ஆண்டு எவ்வித நிபந்தனைகளுமின்றி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்கினோம். ஆனால், கடந்த இரண்டு வருடங்களாக அவர் பொதுஜன பெரமுனவின் கட்சிக்கு முன்னுரிமை வழங்கவில்லை.

மாறாக வீழ்ச்சியடைந்துள்ள ஐக்கிய தேசியக் கட்சியை எமது ஆதரவைக் கொண்டு பலப்படுத்தி பொதுஜன பெரமுனவைப் பலவீனப்படுத்தவே முயற்சிக்கின்றார். இதற்கு இடமளிக்க முடியாது.

காபந்து அரசில் பொதுஜன பெரமுனவுக்கு பிரதமர் பதவியை வழங்குமாறு விடுத்த கோரிக்கைக்கு அவர் சாதகமான பதிலை வழங்கவில்லை. அத்துடன் பொருளாதார மீட்சிக்காக அவர் எடுக்கும் தீர்மானங்களுக்குத் தொடர்ந்து ஆதரவு வழங்க முடியாது. அவரது கொள்கைக்குத் தொடர்ந்து ஒத்துழைப்பு வழங்கினால் கட்சி முழுமையாக இல்லாதொழியும்.

பொதுஜன பெரமுனவின் உறுப்பினரை ஜனாதிபதி வேட்பாளராகக் களமிறக்க வேண்டும் என்று கட்சியின் பெரும்பாலான உறுப்பினர்கள் யோசனை முன்வைத்துள்ளார்கள். ஆகவே, பெரும்பான்மையான நிலைப்பாட்டுக்கு அமையவே தீர்மானம் எடுக்கப்படும்" - என்றார். (05)




# வெளிநாட்டு வேலைவாய்ப்பு தொடர்பில் 12 மோசடியாளர்கள் கடந்த வாரம் கைது!

## வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவிப்பு




கடந்த வாரத்தில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு தொடர்பில் 12 மோசடியாளர்கள் கைது செய்யப்பட்டதாக இலங்கையின் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் விசேட விசாரணைப் பிரிவு தெரிவித்துள்ளது.

நியூசிலாந்து, மலேசியா, ருமேனியா மற்றும் கனடா ஆகிய நாடுகளில் வேலை தொழில் வாய்ப்பு பெற்றுத் தருவதாகக் கூறி பண மோசடி செய்து ஏமாற்றிய ஐந்து பெண்கள் உட்பட 12 பேர் இதில் அடங்குகின்றனர்.

வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் செல்லுபடியாகும் அனுமதிப்பத்திரமின்றி நியூஸிலாந்தில் வேலை வாய்ப்பு வழங்குவதாக கூறி நேர்முகத் தேர்வுகளை நடத்திய குருணாகல் பகுதியிலுள்ள சட்டவிரோத முகவர் நிலையமொன்றையும் அதிகாரிகள் சோதனையிட்டதுடன், அங்கிருந்து விண்ணப்பதாரர்களின் சுயவிபர படிவங்கள் மற்றும் ஏனைய ஆவணங்கள் அடங்கிய 108 கோப்புகளை கைப்பற்றியுள்ளனர். (ரெஜ-79)

# மருதமுனையில் நடைபெற்ற கோல்ட் மைண்ட் விளையாட்டுக் கழகத்தின் ஏ.ஜி.எம் - 2024



(ஏ.எல்.எம்.ஷினாஸ் )

மருதமுனை கோல்ட் மைன்ட் விளையாட்டுக் கழகத்தின் ஏ.ஜி.எம் - 2024 ஒன்றுகூடல் நிகழ்வு மருதமுனை அல்-மனார் மத்திய கல்லூரியில் கழகத்தின் இடைக்கால நிர்வாக சபை தலைவர் எம்.எஸ்.பைலூர் ரஹ்மான் தலைமையில் நேற்று முன்தினம் (28) இரவு நடைபெற்றது. இந்த நிகழ்விற்கு மருதமுனை தொழிலதிபர் அல்ஹாஜ் எம்.ஐ.ஏ.பரீட் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

1975 ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்ட மருதமுனை கோல்ட் மைன்ட் விளையாட்டுக் கழகம் எதிர்வரும் ஆண்டு 50வது ஆண்டு நிறைவைக் கொண்டாடவுள்ளது. கழகத்தின் பழைய நிர்வாக சபை கலைக்கப்பட்டு புதிய நிர்வாக சபை தெரிவு செய்யப்பட்டது. இதன் போது, கழகத்தின் புதிய தலைவராக தொழிலதிபர் எம்.எம். கலீல் முஸ்தபா தெரிவு செய்யப்பட்டார். தவிசாளராக கணக்காளர் வை. ஹபீபுல்லா தெரிவானார். மீயுயர் பீட தலைவராக எம்.எஸ் பைலூர் ரஹ்மான் இங்கு தெரிவு செய்யப்பட்டார்.

கோல்ட் மைன்ட் விளையாட்டுக் கழகம் மீயுயர் பீடம், செயலாற்று சபை, விளையாட்டுச் சபை என மூன்று பெரும் பிரிவுகளும் நிர்வாக மற்றும் நிதி பிரிவு, வெளிவிவகார நலன்புரி, விளையாட்டு மற்றும் அபிவிருத்தி, என்று மூன்று வளையங்களையும் கொண்டதாக அதன் நிர்வாக கட்டமைப்பு செயற்பட்டு வருகின்றது. நிர்வாக மற்றும் நிதி பிரிவின் பிரதம நிர்வாகப் பணிப்பாளராக கழகத்தின் ஸ்தாபகர் ஜமால் முஹம்மட் செயற்பட்டு வருகின்றார். வெளிவிவகார நலன் புரி பிரிவின் பிரதம பணிப்பாளராக சிரேஷ்ட உடற்கல்வி ஆசிரியர் எம்.பி.எம்.றஷீட் செயலாற்ற விளையாட்டு அபிவிருத்தி பிரிவின் பிரதம பணிப்பாளராக எம்.ஏ.எம். அஸ்வர் பணியாற்றவுள்ளனர்.

கழகத்தின் புதிய பொருளாளராக ஏ.எம்.றியாஸ் (ஆசிரியர்) தெரிவு செய்யப்பட்டதுடன் செயலாளராக எம்.சி.நஸார் (அதிபர்) தெரிவாகினர். கழகத்தின் ஊடகப் பணிப்பாளராக எம்.ஐ.எம்.வலீத் தெரிவு செய்யப்பட்டதுடன் 30 பேர் கொண்ட கழகத்தின் நிர்வாக சபை இங்கு தெரிவு செய்யப்பட்டன. கோல்ட் மைன்ட் கழகத்தில் போசகர்களாக ஏழு பேர் செயற்பட்டு வருகின்றனர்.

இந்த நிகழ்வில் அரசியல் பிரமுகர்கள், ஊர் தனவந்தர்கள், கழகத்தின் அபிமானிகள், உலமாக்கள், ஊடகவியலாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர். மேடை நிகழ்வுகளை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் அறிவிப்பாளர் ஏ.எல். நயீம் தொகுத்து வழங்கினார்.

## பெண்கள் சதுரங்கப் போட்டியில் தேசிய மட்டத்துக்குத் தெரிவு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

காத்தான்குடி மீரா பாளிகா தேசியப் பாடசாலை மாணவிகள், 20 வயதிற்குட்பட்ட பெண்களுக்கான சதுரங்க மாகாண மட்டப் போட்டியில் பங்கு பற்றி, தேசிய மட்டத்திற்குத் தெரிவுவாகியுள்ளனர்.

27, 28, 29 ஆகிய தினங்களில் திருகோணமலை புனித ஜோசப் கல்லூரியில் இடம்பெற்ற கிழக்கு மாகாண சதுரங்க போட்டிகளில் கலந்து கொண்ட காத்தான்குடி மீரா பாளிகா பாடசாலை அணி, 20 வயது பெண்கள் பிரிவில் மூன்றாம் இடத்தினை பெற்று தேசிய மட்டத்திற்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.





# தாதிய உத்தியோகத்தருக்கு அனர்த்த முகாமைத்துவப் பயிற்சிப்பட்டறை



(சியாத். எம். இஸ்மாயில்)

கிழக்கு மாகாண தாதிய உத்தியோகத்தர்க ளுக்கான அனர்த்த முகாமைத்துவ பயிற்சிப்பட்டறை அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலை கேட்போர் கூடத்தில் கடந்த 26 ஆம் திகதி முதல் 28 வரை மூன்று நாட்கள் நடைபெற்றது. தாதிய பணிப்பாளர் (மருத்துவ சேவை) எம்.பி.சீ. சமன்மலியின் வழிகாட்டலில் தாதிய பரிபாலகர் பீ.ரீ. நௌபர் ஒருங்கிணைப்பில் அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகர் டொக்டர் ஐ.எம்.ஜவாஹிர் தலைமையில் இப்பயிற்சிப் பட்டறை ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்நிகழ்வில், அனர்த்தம் சம்பந்தமான வைத்தியசாலையின் முன் ஆயத்த திட்டம், விபத்தின் போது அனர்த்த ஒருங்கிணைப்பு விதம், மருத்துவ உபகரணங்களின் முன் ஆயத்தம், அவசர நிலையில் வைத்தியசாலை உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் பங்களிப்பு, ஆவணக்காப்பகமும், நோயாளர்களின் பொறுமதியான உடமைகள் பாதுகாப்பு, அவசர நிலைமைகளின் நோயாளர்களின் உள்வருகை, வெளிச்செல்ல திட்டம், பொதுமக்கள் தொடர்பாடலும் ஊடகச் சந்திப்பும், சனநெரிசல் கட்டுப்பாடு தொடர்பான முகாமைத்துவம் உள்ளிட்ட பல்வேறு தலைப்புக்களில் குழுக்களாக பிரிக்கப்பட்டு வளவாளர்களால் விரிவுரைகள் வழங்கப்பட்டன. இப்பயிற்சிப் பட்டறையினை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்த கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த 50 தாதிய உத்தியோகத்தர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கிவைக்கப்பட்டன.







## மாகாண மட்ட சதுரங்க சுற்றுப் போட்டியில் கல்முனை ஸாஹிரா தேசியக் கல்லூரி மாணவர்கள் இரு பிரிவுகளில் முதலிடம்!



(அஸ்ஹர் இப்றாஹிம்)

கிழக்கு மாகாணப் பாடசாலைகளுக்கு இடையிலான மாகாண மட்ட சதுரங்க சுற்றுப் போட்டியில் ஆண்களுக்கான 20 வயதிற்குறப்பட்ட மற்றும் 17 வயதிற்குறப்பட்ட பிரிவில் கலந்து கொண்ட ஸாஹிரா தேசியக் கல்லூரி மாணவர்கள் முதலிடத்தைப் பெற்று சம்பியன்களாக தெரிவு செய்யப்பட்டதோடு, தேசிய மட்டப் போட்டிக்கும் தெரிவாகினர்.

திருகோணமலை புனித ஜோசப் கல்லூரியில் இடம்பெற்ற மேற்படி போட்டியில் தசாப்தகால வரலாற்று வெற்றிகளுக்கு உறுதுணையாக நின்று மாணவர்களுக்கு பயிற்சியளித்து, தெரிவு செய்து போட்டிக்கு தயார்படுத்தி அழைத்துச் சென்ற சதுரங்க பயிற்றுவிப்பாளர் எஸ்.எம்.சுஹ்தான், பாடசாலையின் சதுரங்க விளையாட்டு பொறுப்பாசிரியர்களான எம்.வை.எம்.றகீப் மற்றும் எச்.எம்.ஜெமீன் ஆகியோரை வாழ்த்துவதோடு, இவ்வரலாற்று வெற்றியை பெற்றுந்தந்த மாணவர்களான (20 வயதிற்குட்பட்ட பிரிவு) ஐ.எம்.சம்லி சாஹி, எம்.ஏ.தமீம், எம்.என்.எம்.றீமாஸ், ஏ.ஆர்.ஏ.சிமர், எம்.ஏ.ஏ. அல்பர், எம்.எம்.அஹ்சப் ஹபி, ஏ.ஆர்.ஏ.றாசிம், (17 வயதிற்குட்பட்ட பிரிவு) எம்.இஷட், எம்.சானிப், ஐ.கே.எம்.ஆக்கில் கான், ஏ.எஸ்.ஏ.மிஜ்வாத், எம்.ஜே.ஐ.சஹ்மி, ஏ.அர்ஹம் பர்வீஸ், என்.அப்துல்லாஹ் சப்கி, எம்.அம்ஹர் ஆகியோருக்கு கல்லூரி அதிபர் எம்.ஐ.ஜாபிர் உள்ளிட்ட கல்வி சமூகத்தினர் வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துள்ளனர்.






## மாணவி மின்மினி மின்ஹா கல்முனையில் கௌரவிப்பு

தேசிய ரீதியில் பசுமை மீட்சி பயணம் என்ற நோக்குடன் 10 இலட்சம் மரங்களை நடுவதற்கு உரிய அதிகாரிகளின் அனுமதி பெற்று தேசிய ரீதியாக தனது செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்லும் பாடசாலை மாணவி மின்மினி மின்ஹாவின் செயற்பாடுகளை கௌரவித்து, அவருக்கு கல்முனை அல் பஹ்றியா மகா வித்தியாலயத்துடன் இணைந்து கல்முனை பிர்லியன்ட் விளையாட்டு கழகம் நடாத்திய விசேட நிகழ்வில் பிரிலியன்ட் சிறுவர்விருது விருது வழங்கி (29)கௌரவிக்கப்பட்டது.

நிகழ்வில் பாடசாலை அதிபர் எம்.ஏ.சலாம், பிரதி அதிபர் ஈ.றினோஸா, உதவி அதிபர்களான எம்.ஆர்.எம்.முஸாதிக், எம்.எச்.ஐ.இஸ்ஸத், யூ.எல்.ஹிதாயா, எம்.எப்.நஸ்மியா, கல்முனை பிர்லியன் விளையாட்டுக் கழகத் தலைவர்கள் எஸ்.எம்.பளீல் மற்றும் கழகத்தின் தவிசாளரும் ஆரம்ப பிரிவு பொறுப்பாசிரியருமான ஸி.நளீம் ஆகியோருடன் சக ஆசிரியர்களும் கலந்து சிறப்பித்தனர்.



## சுவாமி விபுலானந்தரின் 77 ஆவது நினைவு தினம்

(ஹஸ்பர் ஏ.எச்)

சுவாமி விபுலானந்தரின் 77 ஆவது நினைவு தினம் இன்று(30) திருகோணமலை உவர்மலை விவேகானந்தா கல்லூரியில் இடம் பெற்றது.

இந்நிகழ்வில் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் சுவாமி விவேகானந்தர் நூற்றாண்டு விலாசபை ஆலோசகருமான, சண்முகம் குகதாசன், பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

இந்நிகழ்வில் திருகோணமலை மாவட்டத்தில் கடமையாற்றிய முன்னாள் பாடசாலை அதிபர்கள், தற்போது கடமையில் உள்ள அதிபர்கள் உட்படப் பலரும் கலந்து சிறப்பித்தனர்.


JRIDE
BEYOND THE ROAD
Safety and comfort are our concern
ஜேரைட்
JRIDE
TAXI APP FROM JAFFNA
இலங்கை முழுவதும் | Islandwide
DOWNLOAD PASSENGER APP:
ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா? கவலையினை விடுங்கள்.
நாங்கள் தயாராகிவிட்டோம்!
யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)
jride
JRide - Beyond the Road
Speed IT net • Travel & Local
JRide Driver: Drive & Deliver
YOU CAN EASILY REGISTER & BOOK YOUR RIDE
Google Play
App Store
வாகன உரிமையாளர்களே ஓட்டுனர்களே!
உங்கள் தனிப்பட்ட மற்றும் வாடகை வாகனங்களை பயன்படுத்தி உங்கள் வருமானத்தை அதிகரிக்க ஒரு தீர்வு!
இதுவரை பதிவு செய்யாதவர்கள் JRide Driver செயலியில் இலகு முறையில் கணக்கை பதிவு செய்து உங்கள் சேவையை தொடங்கலாம்!
DOWNLOAD DRIVER APP:
jride
JRide Driver: Drive & Deliver
JRide - Beyond the Road
YOU CAN EASILY REGISTER & ADD YOUR VEHICLE
Google Play
App Store
SCHEDULED BOOKING
New Feature
புதிய வசதி
நீண்ட தூர பயணத்திற்கு வாகனத்தினை முன்பதாகவே புக்செய்து வைக்க விரும்புகின்றீர்களா?
விமான நிலையத்திற்கு / விமான நிலையத்தில் இருந்து வாகனம் தேவையா?
எமக்கு அழையுங்கள்; தொலைபேசி ஊடாகவோ; WhatsApp மூலமாகவோ தொடர்பு கொள்ளவும்.
HOTLINE : 706563213 / 703563213
JRIDE TAXI APP
SPEED IT NET
பரமேஸ்வரா சந்தி,
136, பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
+94 703 563213
www.jride.lk
மகிழ்ச்சியான பயணம் திருப்தியான கட்டணம்!